DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**CC. No. 212/2019**

**Deposition of LW2 examined as PW2** Dt. 02.02.2026

| | |
|---|---|
| Name | ஆதித்யன் |
| Father's/Husband's Name | தவசெல்வன் |
| Village | நக்கம்பாடி |
| Taluk | குத்தாலம் |
| Age | 32/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 02.02.2026

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து மயிலாடுதுறை நகரப்பகுதிகளில் விழாக்களுக்கு அலங்கார வேலை செய்து வருகிறேன். இதற்கு முன்பு விவசாயம் செய்து வந்தேன். கடந்த 18.07.2019 அன்று மதியம் 2.00 மணியளவில் நானும் எனது நண்பர் பிரவீன் என்பவரும் வேறு ஒரு நண்பரை பார்க்க இருசக்கரவாகனத்தில் நக்கம்பாடி பள்ளிவாசல் அருகே சென்ற போது அங்கு அ.சா.1 பிரபாகரன் டவர் அருகே இரண்டு பெண்களிடம் விசாரித்து கொண்டிருந்தார். அங்கு இரண்டு பேட்டரிகள் மற்றும் வயர்கள் இருந்தன. ஆஜர் எதிரிகளை சம்பவ இடத்தில் வைத்து பார்த்தேன். பிரபாகரனிடம் என்னவென்று விசாரித்த போது டவரில் சிக்னல் இல்லை என வந்து பார்த்த போது ஆஜர் எதிரிகள் பேட்டரியை எடுத்துவிட்டதாக என்னிடம் தெரிவித்தார். காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்து போலீசார் வந்து விசாரித்தார்கள். பின்னர் ஆஜர் எதிரிககளையும் பேட்டரிகளையும் அ.சா.1 பிரபாகரன் ஆட்டோவில் வைத்து பாலையூர் காவல்நிலையம் அழைத்து சென்று பிரபாகரன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் இருவரும் இரு சக்கர வாகனத்தில் வந்தோமா என்றால் இருசக்கர வாகனத்தில் தான் வந்தோம். நாங்கள் வருவதற்கு முன்பே அந்த தெருவில் வசிக்கும் நபர்கள் கூட்டமாக இருந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் எதற்காக சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு சென்றோம் என்றால் நாங்கள் எங்கள் நண்பரை பார்ப்பதற்காக சென்றபோது சம்பவ இடத்திற்கு சென்றோம். சம்பவம் நடந்ததாக

கூறப்படும் இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தோம் என்றால் சுமார் அரை மணி நேரம் இருந்தோம். காவல்துறையினர் அங்கு வந்தார்களா என்றால் வந்தார்கள். அப்போது எத்தனை மணி இருக்கும் என்றால் மதியம் 2.30 மணி இருக்கும். சாக்குமூட்டைகளில் இருந்த பேட்டரிகளை போலீசார் காவல் நிலையத்திற்கு எடுத்து சென்றார்கள் என்றால் இல்லை. அ.சா.1 பிரபாகரன் தான், எதிரிகளையும், பேட்டரிகளையும் ஆட்டோவில் வைத்து காவல்நிலையத்திற்கு எடுத்து சென்றார். காவல்துறையினர் என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். என்னிடம் ஏதேனும் கையொப்பம் பெற்றார்களா என்றால் நினைவில்லை. அ.சா.1 பிரபாகரன் எனது நண்பர் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்திற்கு வரவில்லை என்றாலும், அ.சா.1 பிரபாகரன் சொல்லிக் கொடுத்ததன் அடிப்படையில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளை நான் பார்த்தது கிடையாது என்றாலும் வழக்கிற்காக பார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்திருப்பின் எங்களுக்கு முன்னால் அங்கு இருந்த பொதுமக்களை சாட்சியாக விசாரித்து இருப்பார்கள் என்றாலும், அவ்வாறு விசாரிக்காததிலிருந்தே நான் சொல்வது பொய் என தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

(signature)

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு. எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

(signature) 2.2.26.

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை